பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 11 புதன்கிழமை 27.07.2022 கதிர் 153

ஆட்சியமைக்க நாம் வருவோம் என்று

## நம்பிக்கைவைப்பது முட்டாள்தனமானது!

சபையில் அரசைச் சாடிய சஜித்



காலிமுகத்திடலில் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தி, அராஜகம் புரிந்தவர்களுடன் ஒன்றாக அமருவதற்கு நாங்கள் தயாரில்லை. ஆட்சியமைக்க ☞2

பொருளாதார நெருக்கடி மனுவில் ரணிலின் பெயர் நீக்கம்

# மஹிந்த – பஸில் நாட்டை விட்டு வெளியேறத் தொடர்ந்தும் தடை

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் அதிரடி



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த அரசுக்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அதிலிருந்து நீக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான மனு இன்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ☞2





'மொட்டு'வின் ஆதிக்கம் இல்லாமல்

## சர்வகட்சி அரசை நிறுவ வேண்டும்

சந்திரிகா கருத்து



புதிதாக அமையவுள்ள சர்வகட்சி அரசின் அமைச்சரவையில் ராஜபக்ஷக்கள் எவரும் ☞2

## எம்.பியானார் வஜிர



ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, நாடாளுமன்ற உறுப்பினராக இன்று சத்தியப்பிரமாணம் செய்தார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போதே சபாநாயகர் முன்னிலையில், ☞2

## சிங்கப்பூரில் கோட்டாவுக்கு மேலும் 14 நாள்கள் அனுமதி



இலங்கையின்முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மேலும் 14 நாள்கள் தங்கியிருக்க சிங்கப்பூர் அனுமதி வழங்கியுள்ளது என்று 'த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்' நாளிதழ் இன்று செய்தி ☞2

தெல்லிப்பழைக்குப் புதுமுக மாணவர்களை அழைத்துப் பகிடிவதை

## யாழ். பல்கலை கலைப்பீட மாணவர்கள் 18 பேருக்குத் தற்காலிக வகுப்புத் தடை!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்கள் 18 பேருக்குத் தற்காலிக வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகக் கலைப்பீட புதுமுக மாணவர்களை ஒன்றுகூடல் எனக்கூறி யாழ். தெல்லிப்பழைக்கு அழைத்துப் பகிடிவதைக்கு உட்படுத்தினார்கள் எனும் குற்றச்சாட்டை அடுத்து, பல்கலைக்கழக உள்ளக விசாரணைகளைத் தடையின்றி மேற்கொள்ளவே 18 மாணவர்களுக்கும் தற்காலிக வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனத் ☞2

## சபை முதல்வராக சுசில் நியமனம் பிரதம கொறடாவானார் பிரசன்ன





நாடாளுமன்றத்தின் சபை முதல்வராக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், ஆளுங்கட்சி பிரதம கொறடாவாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் இன்று இந்தத் தகவலை வெளியிட்டார்.

## தனிஸிடம் சி.ஐ.டி. தீவிர விசாரணை



இம்மாதம் 13ஆம் திகதி, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் பலவந்தமாக நுழைந்து, ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட காலி முகத்திடல் ☞2

## ஹர்ஷ டி சில்வாவுக்கு நிதி அமைச்சுப் பதவி?



சர்வகட்சி அரசின் நிதி அமைச்சுப் பதவிக்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

எனினும், அரசில் ☞2

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற 7 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்குச் செல்ல முற்பட்ட 7 பேரையும், கடத்தலில் ஈடுபட்ட இருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். ☞2

ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாரிடமிருந்து திருடப்பட்ட

## ஐந்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளுடன் இளைஞர் ஒருவர் வசமாகச் சிக்கினார்!



ஐந்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளுடன் ஒருவர் எத்துல் கோட்டே பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

26 வயதுடைய இளைஞரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லை – பொல்துவ சந்திக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்தப் பொலிஸாரால் கொண்டுவரப்பட்டிருந்தபோது திருடப்பட்ட கண்ணீர்ப்புகைக் குண்டுகளுடன் ☞2

## வடக்கில் இருந்து இன்றும் அறுவர் தமிழகம் பயணம்

(ந.லோகதயாளன்)



இலங்கயில் நிலவும் தொடர் பொருளாதார நெருக்கடியால் இன்றும் 6 பேர் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

இவர்களுள் இரு ஆண்கள், ஒரு பெண் மற்றும் ☞2

## சஜித் அணிக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளியிட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு கோட்டாபய ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயமாக சிங்கப்பூர் சென்றபோது வழங்கப்பட்ட குறுகிய கால பயண அனுமதி 14 நாள்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

நாட்டு மக்களின் மாபெரும் எதிர்ப்புப் போராட்டங்களையடுத்து கடந்த 13 ஆம் திகதி இலங்கையை விட்டு கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறி, கடந்த 14 ஆம் திகதி மாலைதீவு வழியாக சிங்கப்பூர் சென்றிருந்தார்.

அவர் சிங்கப்பூர் சென்றபோதும், இலங்கையின் ஜனாதிபதியாக இருந்தார். அதன்பின்னரே மின்னஞ்சல் மூலம் தமது பதவி விலகல் கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பியிருந்தார்.

அதன்பின்னர், பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதிக்குத் தனிப்பட்ட விஜயம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், அவர் புகலிடம் கோரவில்லை எனவும், அவருக்கு எவ்வித பாதுகாப்பும் வழங்கப்படவில்லை எனவும் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருந்தது.

'த ஸ்ட்றெய்ட்ஸ் டைம்ஸ்' நாளிதழின் முந்தைய செய்தியில், சிங்கப்பூரின் குடிவரவு திணைக்களம், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 14 நாட்கள் குறுகிய கால பயண அனுமதி வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தியிருந்தது.

மேலும், இலங்கையில் இருந்து செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்குப் பொதுவாக சிங்கப்பூரில் 30 நாள்கள் குறுகிய கால பயண அனுமதி வழங்கப்படுகின்றது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, குறுகிய கால பயண அனுமதி காலத்தை மேலும் 14 நாள்களுக்கு நீடித்துள்ளார் என்று 'த ஸ்ட்றெய்ட்ஸ் டைம்ஸ்' தெரிவித்துள்ளது.

## சட்டவிரோதமாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வென்னப்புவ – நைனாமடம் பகுதியில் வைத்து இன்று அதிகாலை இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்என்றுபொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, ஜா – எல மற்றும் மினுவாங்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் மூன்று சிறுவர்களும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தனிஸிடம் சி.ஐ.டி. .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டக்காரர் தனிஸ் அலி என்பவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

டுபாய் செல்ல முயற்சித்த நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானத்தினுள் வைத்து குற்றப் புலனாய்வு பிரிவினரால் அவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய குறித்த நபரை தீவிர விசாரணைக்கு உட்படுத்த குற்றப் புலனாய்வு பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

கொழும்பு, கோட்டை மற்றும் காலி முகத்திடல் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் அடிப்படையில், கடந்த 13ஆம் திகதி சில தரப்பினர் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் பலவந்தமாக நுழைந்து ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தியிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில், குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## ஐந்து கண்ணீர்ப்புகைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி பொல்துவ சந்தியில் இடம்பெற்ற அரச எதிர்ப்புப் போராட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், இந்தக்கண்ணீர்ப்புகைக்குண்டுகள்பொலிஸ் பொது ஒழுங்கு முகாமைத்துவப் பிரிவுக்குச் சொந்தமான ஓட்டோவில் ஏற்றிச் செல்லப்பட்டபோது போராட்டக்காரர்களால் அவை திருடப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வடக்கில் இருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
3 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

இன்று காலை சென்றடைந்தவர்களிடம்மறைன்பொலிஸார்விசாரணையை மேற்கொண்டனர். அதன்பின்னர் அவர்கள் மண்டபம் முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

## யாழ். பல்கலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பகிடிவதையில்ஈடுபட்டுள்ளனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள மேற்படி மாணவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் , பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2 வருட காலத்துக்குக் குறையாத வகுப்புத் தடை விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:–

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட புதுமுக மாணவர்கள் ஒன்றுகூடல் எனும் பெயரில் தெல்லிப்பளைப் பகுதிக்கு அழைத்துப் பகிடிவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ்ஜுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

முறைப்பாட்டின் பிரகாரம் அது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளரால் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டது.

அதையடுத்து சட்ட நிறைவேற்று அதிகாரி, மாணவர் ஆலோசகர் மற்றும் மாணவர் ஒழுக்காற்று அதிகாரி உள்ளிட்ட குழுவினர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று கலைப்பீட புதுமுக மாணவர்களை சிரேஷ்ட மாணவர்களிடம் இருந்து மீட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க ஏதுவாக சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்கள் 18 பேருக்குத் தற்காலிக வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் தமது பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். புதுமுக மாணவர்களின் வாக்குமூலங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பூர்வாங்க விசாரணைகளின் அடிப்படையில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படும் மாணவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். அதன் அடிப்படையில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2 வருட காலத்துக்குக் குறையாத வகுப்புத் தடை விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மஹிந்த - பஸில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எவ்வாறாயினும், குறித்த மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மனுதாரர்கள் ஆட்சேபனை தெரிவிக்காததால் அவரை விடுதலை செய்யுமாறு மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தக ஜயசுந்தர நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன உள்ளிட்ட தரப்பினர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டோரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

எவ்வாறாயினும், குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில், மற்றைய பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கு எதிரான வெளிநாட்டுப் பயணத் தடையை எதிர்வரும் ஆகஸ்ட் 2ஆம் திகதி வரையில் நீடிக்க நீதியரசர்கள் ஆயம் தீர்மானித்துள்ளது.

## எம்.பியானார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வஜிர எம்.பியாக உறுதியுரை ஏற்றார்.

ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாகப் பதவியேற்றதால் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே வஜிர நியமிக்கப்பட்டுள்ளார்.

வஜிர அபேவர்தன, ஜனாதிபதி ரணிலின் தீவிர விசுவாசி. பல வருடங்கள் ஐ.தே.கவில் நீடிப்பவர். நல்லாட்சியின் போதும் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்தவர்.

## எம்.பியானார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாங்கள் வருவோம் என்று அவர்கள் நம்பிக்கை வைப்பது முட்டாள்தனமானது.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போது தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். அவர் நியமிக்கப்பட்ட விதம் தொடர்பில் பல விமர்சனங்கள் உள்ளன. எனினும், அரசமைப்பின் பிரகாரம் அவர் நியமிக்கப்பட்டதால், அவருக்குரிய மதிப்பை வழங்குகின்றோம். பதவியேற்ற ஜனாதிபதியைச் சந்தித்து நாம் கலந்துரையாடினோம்.

நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்கும் வகையில் இணைந்து செயற்பட எம்மை அழைத்தார். நாட்டின் 220 இலட்சம் மக்களுக்கு நன்மைகளை ஆற்ற நாம் ஒன்றிணைய வேண்டும் என்றார். கடந்த கால சம்பவங்களைப் புறந்தள்ளி அவருடன் இணைந்து செயற்பட நாம் தயாராக இருந்தோம்.

ஆனால், கடந்த 21ஆம் திகதி நள்ளிரவு மோசமான தீர்மானம் எடுக்கப்பட்டது. வன்முறை தலைதூக்கியது. அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இதன்பின்னரும் ஆட்சியமைக்க நாம் வருவோம் என்று நம்பிக்கை வைப்பது முட்டாள்தனமானது. மக்கள் ஆணைக்கு எதிரான, காட்டிக்கொடுக்கும் தீர்மானத்தை எடுக்க ஐக்கிய மக்கள் சக்தியோ, கூட்டணியோ தயாரில்லை.

நாம் எவருக்கும் முட்டுக்கொடுக்க மாட்டோம். இந்த அசிங்கமான அரசியல் கொள்கைக்கு கைதூக்க நாம் தயாரில்லை.

கடந்த 21ஆம் திகதி நள்ளிரவு காலி முகத்திடலில் அப்பாவி மக்களே இருந்தனர். மறுநாள் வெளியேறுவதாக அவர்கள் அறிவித்தனர். இத்தகைய சூழ்நிலையிலும், மிகவும் அனுபவமிக்க ரணில் விக்கிரமசிங்க, மோசமான ஒரு ஆலோசனையைக் கேட்டு, வன்முறைக்கு ஆணையிடுவார் என நான் நினைக்கவில்லை.

இத்தகையவர்களுடன் ஒன்றாக அமரும் அளவுக்கு நாம் தேசத்துரோகிகள் அல்லர். அவ்வாறு செய்யவும் தயாரில்லை.

எனினும், நாட்டுக்காக எம்மால் முடிந்த வரை, எல்லையற்ற உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளோம் – என்றார்.

## ஹர்ஷ டி சில்வாவுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இணைந்து அமைச்சு பதவியைப் பெற்றுக்கொள்வாரா என்பது தொடர்பில் ஹர்ஷ டி சில்வா இதுவரை எவ்வித அறிவிப்புகளையும் விடுக்கவில்லை.

சர்வகட்சி அரசு அமைக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினாலும், அதில் இணைந்து பதவிகளைப் பெறபோவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

## சர்வகட்சி அரசை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அங்கம் வகிக்கக்கூடாது. அவர்களுடைய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் ஆதிக்கம் செலுத்தக்கூடாது. அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியவாறு சர்வகட்சி அரசு அமைவதே நாட்டுக்கு நல்லது.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இருவரையும் மக்கள் விரும்பவில்லை. இதனால்தான் மக்கள் நாடெங்கும் போராட்டம் நடத்தினார்கள்.

புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றம் தெரிவு செய்துள்ளது. புதிய பிரதமரை ஜனாதிபதி தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி தெரிவு செய்துள்ளார்.

இந்நிலையில், இடைக்கால சர்வகட்சி அரசு அவசியம். தனியொரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாது. அனைவரது ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் மிகவும் அவசியம். ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பேதம் இல்லாமல் சர்வகட்சி அரசு அமையவேண்டும்.

இதேவேளை, புதிய பிரதமர் தொடர்பில் சர்வகட்சி அரசுதான் தீர்மானிக்க வேண்டும் – என்றார்.

விளம்பர தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பற்றியெரியும் பிரச்சினை

**அரசியல் குழப்பமாகட்டும், பொருளாதார நெருக்கடியாகட்டும், வாழ்வியல் சிக்கல்கலாகட்டும் எதுவாயினும் தீர்க்கப்படுவதற்கு முன்னர் நாட்டில் பற்றியெரியும் பிரச்சினையாக இருக்கும் எரிபொருள் பற்றாக்குறையும் அதனால் ஏற்பட்டுள்ள குழப்பங்களும் தீர்க்கப்பட வேண்டும்.**

**இலங்கை மக்களின் வாழ்வியலின் ஒவ்வொரு அம்சத்திலும் இந்த எரிபொருள் பற்றாக்குறை பாரிய தாக்கத்தை செலுத்தி நிற்பது கண்கூடு.**

**'கியூ கோர்ட்' முறை, வாகன இலக்கத்தின் கடைசி எண் முறை, அத்தியாவசிய சேவைகளுக்குத் தனி வரிசை என்ற கதைகள் எல்லாம் – பகிர்வு முறைமை எல்லாம் – இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கோ, அந்த நெருக்கடியைத் தணிப்பதற்கோ போதுமானவை அல்ல.**

**மக்கள் லட்சக்கணக்கான வாகனங்களை இறக்குமதி செய்து வைத்திருக்கிறார்கள். வீதிகள் தாராளமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் ஒழுங்காக வாகன இறக்குமதி வரியில் இருந்து, வருடாந்த பாவனைக்குரிய வரிகள் வரை சுளையாக அரசுக்குச் செலுத்துகிறார்கள். ஆகவேஎரிபொருள்விநியோகத்தை பற்றாக்குறையின்றி மக்களுக்கு வழங்க வேண்டியது அரசின் கடமை, பொறுப்பு.**

**அதுவும் பெற்றோல் டீசல் எதுவும் மானிய அடிப்படையில் இப்போது மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. அவற்றின் பெறுமதிக்கான கடைசி சொட்டு சதம் வரை பாவனையாளர் மீது சுமத் தியே எரிபொருள் கட்டணம் அறவிடப்படுகின்றது. அந் தக் கட்டணத்தை அறவிட்டும் கூட – எரிபொருள் கொடுப்பனவுக்கான முழு செலவினத்தையும் பாவனையாளர் செலுத்தியும் கூட – அதனை மக்களுக்குத் தட்டுப்பாடு இன்றி விநியோகிக்க முடியாத கையறு நிலையில்தான் அரசு இருக்கின்றது.**

**கேட்டால் எரிபொருள் இறக்குமதி செய்ய அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை என்கிறது அரசு. மக்கள் டொலரை, பவுண்ட்ஸை, யூரோவை சொற்பமாகவேனும் உழைத்து வைத்திருக்கின்றார். ஆனால் அவற்றை சட்டரீதியான புழக்கத்திற்கு விடுகின்றார்கள் இல்லை, உண்டியல் ஊடான பரிமாற்றத்தில் ஈடுபடுகின்றமையினால் அந்நிய செலாவணி கிட்டுவதில்லை என்ற குற்றச்சாட்டு உண்டு.**

**தனியார் வர்த்தகர்கள் வெளிநாட்டில், தாமே அந்நிய செலாவணியைத் தேடி எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பது குறித்து சிந்திக்கப்படுகின்றது. அதே முறைமையை மறுவளமாக தனியாள்களிடம் இருந்து அந்நிய செலாவணியில் – டொலரில், பவுண்ட்ஸில், யூரோவில் வரவு வைத்து, எரிபொருளை விநியோகிக்கும் முறைமையை அரசு ஏன் பரீட்சார்த்தமாக செய்து பார்க்கக் கூடாது? இவ்வாறு எரிபொருளை விற்கும் தனி எரிபொருள் விற்பனை மையங்களை விசேடமாகத் திறந்தால், வெளிநாட்டு நாணயங்களைப் பதுக்கி வைத்திருப்பவர்கள் எரிபொருள் பெறுவதற்காகவாவது அரசின் நிறுவனங்களுக்கு அவற்றைக் கொண்டு வருவார், அந்நிய செலாவணி அரசுக்குக் கைமேல் கிடைக்கும் வாய்ப்பு உண்டு.**

**நாட்டுக்குள் இலங்கை நாணயத்துக்கு அப்பால், இன்னொரு நாணயத்தின் பெறுமதியில் நுகர்வுக்கு அனுமதிப்பது – வர்த்தகத்துக்கு இடம் அளிப்பது – நாட்டின் இறைமையும் தனித்துவத்தையும் கேள்விக்கு உள்ளாக்கும் என்றாலும் – கொழும்பு துறைமுக நகரத்தில் விசேடமாக அனுமதித்திருப்பது போல – இப்போதைய நெருக்கடியின், இக்கட்டின், தீவிரம் கருதி அப்படி ஓர் ஏற்பாட்டுக்கு அரசு தற்காலிகமாகவேனும் இணங்குவது குறித்து சிந்திக்கலாம் அல்லவா?**

# ரயில்வேத் திணைக்கள நட்டத்தை ஈடுசெய்யவே கட்டண அதிகரிப்பு!

## அமைச்சர் பந்துல விளக்கம்



ரயில் திணைக்களம் தற்போது நாளொன்றுக்கு 10 கோடி ரூபா நஷ்டத்தை எதிர்கொள்கிறது. அந்த நஷ்டத்தை ஈடுசெய்வதற்காகவே ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இவ்வாறு தொடர்ந்தும் ரயில் திணைக்களத்தை நஷ்டத்தில் இயங்க இடமளிக்க முடியாது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த 2012 ஆம் ஆண்டு ரயில் திணைக்களத்தின் மாதாந்த வருமானம் 400 கோடியே 880 லட்சம் ரூபாவாகும். ஆனால் 3 கோடியே 40 லட்சம் ரூபா நஷ்டமாகும். அதே போன்று 2021 இல் வருமானம் 400 கோடியே 50 லட்சம் ரூபாவாகக் காணப்பட்ட நஷ்டம் 400 கோடியே 40 லட்சம் ரூபாவாக உயர்வடைந்தது.

இவ்வாறு தொடர்ந்தும் பாரிய நஷ்டத்தை எதிர்கொள்வதால் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல் மற்றும் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கான கொடுப்பனவை வழங்குதல் உள்ளிட்டவற்றில் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போது ரயில்வேத் திணைக்களம் நாளொன்றுக்கு 10 கோடி ரூபா நஷ்டத்தை எதிர்கொள்கிறது. இவ்வாண்டு இதுவரையான காலப்பகுதியில் மேலதிக வேலை நேர கொடுப்பனவு மாத்திரம் 200 கோடியே 30 லட்சம்ரூபாவழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காகவும், நஷ்டத்தினை ஈடுசெய்வதற்காகவுமே ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தற்போது எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் பஸ் போக்குவரத்தில் காணப்படுகின்ற சிக்கலால் பெரும்பாலான பொது மக்கள் ரயில் சேவையில் பயணிக்கத் தொடங்கியுள்ளனர். கடந்த சில மாதங்களுடன் ஒப்பிடும் போது ரயில் பாவனையாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

எவ்வாறிருப்பினும் இதனைக் கருத்திற் கொண்டுரயில்பெட்டிகளின்எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பிலோ அல்லது ரயில்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பிலோ அவதானம் செலுத்தப்படவில்லை.

காரணம் ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டுள்ள ரயில் பெட்டிகளுக்கான கொடுப்பனவுகளை செலுத்தாமலிருப்பதால், அதற்கான தண்டப்பணத்தையும் செலுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் ரயில் பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில் அவதானம் செலுத்த முடியாது. – என்றார்.

# கோட்டாபய ராஜபக்ஷவை விசாரணைசெய்யவேண்டும்!

## 17 அமைப்புகள் சிங்கப்பூர் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கடிதம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சிங்கப்பூர் விசாரணைக்குட்படுத்த வேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் உட்பட 17 அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

சிங்கப்பூரின் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சர்வதேச விவகார பிரிவின் சொலிஸிட்டர் ஜெனரலிற்கு எழுதியுள்ள கடிதத்தில் 17 அமைப்புகளும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியை விசாரணைக்குட்படுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளன.

கீழ் கைச்சாத்திட்டுள்ள அமைப்புகளாகிய நாங்கள் உடனடியாக கோட்டாபய ராஜபக்ஷவை இலங்கையில் சர்வதேச சட்டங்களின் கீழ் பாரதூரமான குற்றங்கள் இடம்பெற்றமை தொடர்பாக விசாரணை செய்து பொருத்தமானால் வழக்கை தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என 17 அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஜூலை 14 ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரிலிருந்து தனது இராஜினாமாவை மின்னஞ்சல் மூலம் சமர்ப்பித்தார். இதன் காரணமாக அவர் தொடர்ந்தும் விடுபாட்டுரிமைக்குரியவர் இல்லை என 17 அமைப்புகளும் தெரிவித்துள்ளன.

2008 – 2009 காலப்பகுதியில் கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராகப் பணியாற்றியவேளை இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் மனித உரிமை துஷ்பிரயோக இராணுவநடவடிக்கையொன்றை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்தது, அந்தவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னி காணப்பட்டது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் வன்னி இராணுவ நடவடிக்கை கண்மூடித்தனமான குண்டுவீச்சு எறிகணை வீச்சு பொதுமக்கள் இலக்குகள் மீதான தாக்குதல்களை உள்ளடக்கியிருந்தது.

இலங்கை அரசாங்கம் தமிழ் பொதுமக்கள் பாதுகாப்பு வலயங்களுக்குள் செல்லுமாறு உத்தரவிட்டதுடன் பின்னர் அதனைத் தாக்கியது. வைத்தியசாலைகளும் தற்காலிக மருத்துவமனைகளும் 30 தடவைகளுக்கு மேல் தாக்கப்பட்டன, இலங்கையின் யுத்தத்தின் இறுதி தருணங்களில் 70 ஆயிரம் முதல் ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 796 பொது மக்கள் கொல்லப்பட்டனர் என மதிப்பிடப்படுகின்றது.

கட்டளை பொறுப்பின் அடிப்படையில் சாத்தியமான பொறுப்பிற்காக ராஜபக்ஷவை விசாரணை செய்யவேண்டும், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் அவர்களின் குடும்பத்தவர்களும் சரணடைந்ததும் அவர்களை சுட்டுக்கொல்லுமாறு கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார் என்பதற்கான தகவல்கள் பொதுவெளியில் காணப்படுகின்றன.

கோட்டாபய ராஜபக்ஷ, வைத்தியசாலைகளின் மீது பரந்துபட்ட திட்டமிடப்பட்ட குண்டு வீச்சுகளுக்கு வழிகாட்டினார், பொதுமக்கள் இலக்குகளும் பொதுமக்களும் சட்டபூர்வமான இலக்குகள் என மீண்டும் மீண்டும் தெரிவித்தார். பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதலுக்கும் ராஜபக்ஷ காரணம் எனத் தகவல்கள் காணப்படுகின்றன.

இலங்கையில் இழைக்கப்பட்ட பாரதூரமான சர்வதேச குற்றங்களுக்காக சிங்கப்பூர் விசாரணைகளை மேற்கொண்டு பொருத்தமான விதத்தில் நியாயாதிக்கத்தை ராஜபக்ஷ மீது பிரயோகிக்கவேண்டும்.

சர்வதேச சட்டங்கள் மற்றும் பயன்படுத்தக்கூடிய உள்நாட்டு சட்டங்களின் கீழ் பாரிய அநீதிகளுக்காக கோட்டாபயவிற்கு எதிராக சட்டமா அதிபர் விசாரணைகளை ஆரம்பிக்கலாம்.

உலகின் பாரதூரமான குற்றங்களை இழைத்தார் என ராஜபக்ஷ நம்பகத்தன்மை மிக்க விதத்தில் குற்றம்சாட்டப்பட்டுள்ளார், பாரிய துஷ்பிரயோகங்களுடன் தொடர்புபட்ட நபருக்கு சிங்கப்பூர் அடைக்கலம் அளிக்கக்கூடாது. மாறாக, சிங்கப்பூர் சர்வதேச நீதி கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட குற்றங்களுக்காக உடனடியாக ராஜபக்ஷவை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என 17 அமைப்புகளும் தெரிவித்துள்ளன.

# வடக்கு பிலிப்பைன்ஸில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்



## ரிக்டர் அளவில் 7.3ஆக பதிவு

வடக்கு பிலிப்பைன்ஸில் உள்ள அப்ரா மாகாணத்தைச் சுற்றிய மலைப் பகுதியில் இன்று 7.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதிர்வு உணரப்பட்டதை அடுத்து, பீதியடைந்த மக்கள் வீட்டைவிட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சமடைந்தனர்.

இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் மற்றும் வீடுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும், உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றாலும், அதிகளவில் பொருள் சேதங்கள் ஏற்படுத்தி உள்ளன என்றும் பிலிப்பைன்ஸ் எரிமலை மற்றும் நில அதிர்வு ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

பசுபிக் பெருங்கடலைச் சுற்றியுள்ள பிழைகளின் வளைவான பசுபிக் ரிங் ஆப் பயர் உடன் அமைந்துள்ள பிலிப்பைன்ஸில் உலகின் பெரும்பாலான பூகம்பங்கள் ஏற்படுகிறன. இது ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20 சூறாவளி மற்றும் வெப்பமண்டல புயல்களால் தாக்கப்படுகிறது. இது உலகின் மிகவும் பேரழிவு பாதிப்புக்குள்ளாகும் நாடுகளில் ஒன்றாகும்.

1990ல் வடக்கு பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட 7.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தில் 2,000 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போப் பிரான்சிஸ் கனடாவுக்கு சுற்றுப்பயணம்



கனடாவில் 1900ஆம் ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் பழங்குடியினத்தை சேர்ந்த சிறுவர்கள் அவர்களின் குடும்பத்தினரிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டு, கத்தோலிக்க தேவாலயங்களால் நடத்தப்பட்ட பள்ளிகளில் தங்கி கல்வி பயில கட்டாயப்படுத்தப்பட்டனர்.

அப்படி தேவாலய பள்ளிகளில் படித்த பல்லாயிரக்கணக்கான பழங்குடியின மாணவர்கள் உடல் ரீதியிலும், பாலியல் ரீதியிலும்பல்வேறுதுன்புறுத்தல்களுக்குஉள்ளாக்கப்பட்டனர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கனடாவின் தற்போதைய அரசு இதை ஒப்புக்கொண்டு, அதற்காக மன்னிப்பும் கோரியது.

இந்த நிலையில், கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸ் 6 நாள் பயணமாக கனடா சென்றுள்ளார். தனது சுற்றுப்பயணத்தின் முதல் நிகழ்வாக அல்பெர்டா மாகாணத்தின் தலைநகர் எட்மான்டனில் 19ஆம் நூற்றாண்டில் தேவாலய பள்ளிக்கூடமாக இருந்த மிகவும் பாழடைந்த கட்டிடத்துக்கு சென்று அங்கு கூடியிருந்த பழங்குடியின மக்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது 19ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க தேவாலயங்களால் நடத்தப்பட்ட பள்ளிக்கூடங்களில் பழங்குடியின மாணவர்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டதற்காக போப் பிரான்சிஸ் மன்னிப்பு கோரினார்.

# சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து விலக ரஷ்யா முடிவு



2024ஆம் ஆண்டிற்கு பிறகு சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து ரஷ்யா விலக முடிவெடுத்துள்ளதாக அந்நாட்டு விண்வெளி ஆய்வு மையமான ரோஸ்கோஸ்மோஸ் அறிவித்துள்ளது.

உக்ரைனுடனான போர் காரணமாக ரஷ்யாமீதுமேற்குநாடுகள்பொருளாதார தடைகள் விதிக்கும் நிலையில், அந்நாடு இம்முடிவை எடுத்துள்ளது. கூட்டணி நாடுகளுக்கு அளித்த கடமைகளை முறையாக நிறைவேற்றுவோம் என அதிபர் புதினிடம் ரோஸ்கோஸ்மோஸ் தலைவர் யூரி போரிசோவ் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், கனடா, ஐரோப்பிய நாடுகள் தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்தில் பங்களிப்பை வழங்கி வருகின்றன.



# அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற அயர்லாந்து தலைவர் காலமானார்

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற அயர்லாந்து நாட்டின் முதல் மந்திரியாக இருந்த டேவிட் டிரிம்பிள் காலமானார். அவர் மறைந்துவிட்ட செய்தியை அவரது குடும்பத்தினர் நேற்று உறுதிபடுத்தியுள்ளனர் என டிரிம்பிளின் அல்ஸ்டர் யூனியனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

டேவிட் டிரிம்பிளின் முயற்சியால் 1998ஆம் ஆண்டு பெல்பாஸ்ட் ஒப்பந்தம் நிறைவேறியது. மேலும், அவர் புனித வெள்ளி ஒப்பந்தம் ஏற்பட காரணமாக திகழ்ந்த சிற்பி என்று போற்றப்படுபவர் ஆவார்.

பெல்பாஸ்ட் பகுதிகளில் 30 ஆண்டாக நீடித்து வந்த செக்டேரியன் வன்முறையில் சுமார் 3,600 பேர் பலியானார்கள். அங்கு கலவரத்தை முடிவுக்கு கொண்டுவந்து அமைதியை நிலைநிறுத்த டேவிட் டிரிம்பிள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக அவருக்கு 1998ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# குடியிருப்பு பகுதிக்குள் 11 அடி நீள முதலை

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் நள்ளிரவில் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்து பொதுமக்களை அச்சுறுத்திய 11 அடி நீளமுள்ள ராட்சத முதலை பிடிபட்டது.

சார்லோட் நகரில் ஒரு வீட்டின் வாசலில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப்பிற்கு அடியில், ராட்சத முதலை இருப்பதைக் கண்டு அச்சமடைந்த மக்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். அந்த முதலையை பிடிக்க முற்பட்ட போது, அது வாயை பிளந்து சத்தமிட்டது.

பின்னர் நீண்ட போராட்டத்துக்கு பின் அந்த முதலையை வனத்துறையினர் பிடித்தனர்.



# விமானத்தில் வழங்கப்பட்ட உணவில் பாம்பு தலை

பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பார்கள். அப்படி இருக்கையில் விமானத்தில் உணவு உண்ணும் போது உங்கள் தட்டில் பாம்பு இருப்பதை கண்டால் உங்களின் கதி என்னவாகும். அப்படி ஒரு சம்பவம்தான் ஜேர்மனி செல்லும் விமானத்தில் நிகழ்ந்துள்ளது.

துருக்கி நாட்டின் தலைநகர் அங்காராவில் இருந்து ஜேர்மனியின் டஸ்சல்டார்வ் நகரை நோக்கி சன் எக்ஸ்பிரஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்போது விமான பணிப்பெண்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

அவர்களில் ஒரு விமான பணிப்பெண் தனக்கு வழங்கப்பட்ட உணவை சாப்பிட தொடங்கிய சில நிமிடங்களில் உணவில் காய்கறிகளுக்கு நடுவே பாம்பின் தலை கிடந்ததை கண்டு அதிர்ந்து போனார். உடனடியாக அவர் அதை படம் மற்றும் வீடியோ எடுத்து டுவிட்டரில் பகிர்ந்தார்.

இதனால் சிறிது நேரத்திலேயே இந்த விவகாரம் பூதாகரமானது.

அதை தொடர்ந்து, சம்பந்தப்பட்ட கேட்டரிங் நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக அறிவித்த சன் எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் இந்த சம்பவம் குறித்து விரிவாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளது.

# எரிவாயு நிரப்பும் மையத்தில் வெடித்துச் சிதறியது கார்



பிரேஸிலில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் எரிவாயு நிரப்பும் மையத்தில் கார் ஒன்று வெடித்து சிதறும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

Mario Magalhes மற்றும் அவரது மனைவி lyndreia Magalhes ஆகியோர் தங்களது காருக்கு எரிவாயு நிரப்பிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த கார் எதிர்பாராதவிதமாக வெடித்து தூள்தூளாக சிதறியது.

இந்த சம்பவத்தில் கணவன் – மனைவி உள்பட 3பேர் காயம் அடைந்தனர். கார் திடீரென வெடித்து சிதறியதற்கான காரணம் என்ன என்று தெரியவில்லை.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நற்பிட்டிமுனை பொதுச்சந்தையின் அவல நிலை குறித்து மக்கள் விசனம்







**(நூருல் ஹுதா உமர்)**

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்டதும் மாநகர சபைக்குச் சொந்தமானதுமான நற்பிட்டிமுனை பொதுச்சந்தையின் அவலம் குறித்து மாநகர சபையின் சொத்துக்குப் பொறுப்பான மாநகரத்தின் ஆணையாளர் அறிந்திருந்தும் கண்மூடித்தனமாக நடந்து கொள்கிறார் எனவும், இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க முன்வராமல் இருக்கிறார் எனவும் நற்பிட்டிமுனை பொதுச் சந்தை வர்த்தகர்களும் ஊர்ப் பொது மக்களும் குற்றம் சுமத்துகின்றனர்.

நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு தமிழ், முஸ்லிம் மக்கள் பரவலாக பாவித்துவரும் சந்தையின் நீர்தாங்கி பலமாதகாலமாக உடைந்துசேதமடைந்துள்ளது. இதனால் மீன் சந்தை மற்றும் மலசல கூடம் கழுவி சுத்தம் செய்யப்படாமையால் துர்வாடை வீசுவதாகவும், தொற்று நோய் பரவும் ஆபத்து காணப்படுவதாகவும் பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் ஒரு மாதத்துக்கும் மேலாக அங்குள்ள திண்மக்கழிவுகள் அகற்றப்படாமையினால் அங்கு தேங்கியுள்ள கழிவுகளால் பாரிய சூழல் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

மாநகர முதல்வர், ஆணையாளர், இந்த ஊரை பிரதிநிதித்துவப்படுத்தும் மாநகர சபை உறுப்பினர் சீ. எம். முபீத் ஆகியோர் நற்பிட்டிமுனை மக்களின் பிரச்சினைக்கு உடனடி தீர்வை பெற்றுத்தர முன்வரவேண்டும் என்று மக்கள் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

# பாதயாத்திரிகர்களின் உடைமைகளை அள்ளிச் சென்ற காட்டாற்று வெள்ளம்

## வியாழையில் நடுநிசியில் நேர்ந்த விபரீதம்

**(வியாழையிலிருந்து காரைதீவு நிருபர் சகா)**

ஆயிரக்கணக்கான கதிர்காம பாதயாத்திரை அடியார்கள் உறங்கி கொண்டிருந்த வேளையில் திடீரென ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தால் அடியார்கள் அல்லோலகல்லோலப்பட்டார்கள்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றது. பாரம்பரிய பாதயாத்திரை வரலாற்றில் இப்படி நடந்தது இதுவே முதல் தடவையாகும். விடிய விடிய மழை பொழிந்து கொண்டிருந்தது.

காட்டாற்று வெள்ளத்தால் திடீரென வியாழை ஆற்றின் நீர் மட்டம் 5 அடி வரை உயர்வடைந்தது.

இதனால் அடியார்கள் திக்குமுக்காட அரோகரா கோசம் விண்ணைப் பிளந்தது. அடியார்கள் உயிரைக் கையில் பிடித்தபடி காட்டுக்குள் ஓடினர்.

ஆனால் அவர்களது உடைமைகளை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. அவர்களது உடுப்பு பைகள், உணவுப் பொதிகள், ரார்போலின் அனைத்தும் வெள்ளத்தில் அள்ளுண்டன.



அருகில் உள்ள வள்ளி அம்மன் ஆற்றில் நின்ற அடியார்களுக்கு இராணுவம் முன்னதாக அறிவித்தது. ஆனால் ஆயிரக்கணக்கான அடியார்கள் தங்கியிருந்த வியாழையில் எந்த அறிவித்தலும் இல்லை. அதுவே நள்ளிரவு அவலத்திற்கு காரணம் என்று பாதயாத்திரை அடியார் மு.காண்டீபன்(காரைதீவு) கூறினார். அடியார்கள் பெரும் பீதிக்குள்ளானார்கள்.



# காட்டுப்பாதையில் யானையின் சடலம்

**(காரைதீவு நிருபர் சகா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்கான பாதயாத்திரை அடியார்கள் செல்லும் காட்டு பாதையில் யானை ஒன்றின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

வியாழை ஆற்றில் இருந்து வள்ளியம்மன் ஆற்றை நோக்கிச் செல்கின்ற பாதையில் இந்த யானை இறந்து கிடந்தது. இரண்டு நாள்களாக இந்த பாதையில் கிடந்த யானை உடலம் மிருகவைத்தியர்களின் உடற்கூறு பரிசோதனையின் பின்னர் அடக்கம் செய்யப்பட்டது.

# கதிர்காமம் காட்டுப் பாதையில் பல்லாயிரம் அடியார்கள் பயணம்



**(உகந்தையிலிருந்து காரைதீவு நிருபர் சகா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை கடந்த வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. வரலாறு காணாத வகையில் இம்முறை ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட அடியார்கள் முதல் தடவையாக முதல் நாளிலேயே காட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

இந்து சமய கலாசார முறைப்படி கழுகுமலை பத்து பாடி காட்டுப் பாதை திறந்து வைக்கப்பட்டது.

கொரோனா காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக காட்டுப் பாதை திறக்கப்படவில்லை என்பது தெரிந்ததே.

வெள்ளியன்று அதிகாலை 5.30 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடாத்தி ஆசியுரை வழங்கினார்.

காலை 7 மணியளவில் குமண சரணாலய நுழைவாயிலில் காட்டுப் பாதை சம்பிரதாய பூர்வமாக திறக்கப்பட்டது.

அவ்சமயம், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, மொனராகலை மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபர், ஆலய வண்ணக்கர் சுது நிலமே திஸாநாயக்க, கிழக்கு கலாச்சார பணிப்பாளர் ச.நவநீதன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் இந்து சமய செயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பல அன்பர்கள் கலந்து



கொண்டார்கள்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரனின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜியின் ஏற்பாட்டில் கழுகுமலை பத்து பாடி காட்டுப் பாதை திறந்துவைக்கப்பட்டது.

முதல் நாளிலேயே சுமார் 6,000 பாதயாத்திரிகர்கள் பயணித்தமை இதுவே முதல் முறையாகும்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த சி.ஜெயராசா தலைமையிலான 56 நாள் மிகநீண்ட பாதயாத்திரை அடியார்கள் உள்ளிட்ட 6 ஆயிரம் அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும். உகந்தையிலிருந்து ஐந்து மைல்தூரத்தில் வாகூர வட்டை. பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு. 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை. 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு. 8 மைல் தூரத்தில் கட்டகாமம். அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் மொத்தமாக காட்டுப்பாதை 56 மைல்களை உள்ளடக்கியது .

சுமார் 6 நாள்கள் இந்த காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை. கடந்த வெள்ளி திறந்து வைக்கப்பட்ட காட்டுப்பாதை ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி மூடப்படுகிறது. கதிர்காம கொடியேற்றம் 29 ஆம் திகதி நடைபெற உள்ளது. ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி தீர்த்தம் இடம்பெறும் .

கதிர்காமப் பாதயாத்திரை அகத்திய முனிவர் தொடக்கி அருணகிரியார் ஈறாகவும், யோகர் சுவாமி முதற்கொண்டு சித்தானைக்குட்டி வரை எண்ணிறைந்த சித்தர் பெருமக்கள் இன்றுவரை தம் பாதக் கமலங்களை பதித்து பவனி சென்ற பாதையில் வருடாவருடம் நாமும் பயணிக்கின்றோம் என ஷேத்திராடனம் எனும் நூலில் கூறப்பட்டுள்ளன.

அத்தகைய வரலாறு கூறும் பாதயாத்திரை இம்முறை இரண்டு வருடங்களுக்கு பிறகு சிறப்பாக நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் பலத்துடன் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி பதவியில் இருந்து கடாசவேண்டும்

## வாசுதேவ நாணயக்கார போர்க்கொடி

ஜனாதிபதி தலைமையிலான சர்வகட்சி அரசாங்கம் அமைத்தால் அதன் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலேயே அதில் இணைவதா இல்லையா எனத் தீர்மானிப்போம். மக்கள் பலத்துடன் ரணில் விக்கிரமசிங்கை அந்த பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலே நாங்கள் இருக்கின்றோம் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

புதிய லிபரல்வாதத்துக்கு எதிராக புதிய சோசலிச பொருளாதாரக் கொள்கையை கொண்டுவரவே கோட்டாபய ராஜபக்ஷவை நாங்கள் ஜனாதிபதி பதவிக்கு கொண்டுவந்தோம். ஆனால் 20ஆவது திருத்தம் மூலம், அமெரிக்க பிரஜையான பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்துக்குகொண்டுவந்து, நிதி அமைச்சு வழங்கப்பட்டது,

இதன் மூலம் எமது சோசலிச பொருளாதாரக் கொள்கையை முன்னெடுப்பது சாத்தியமில்லை என எமக்குத் தோன்றியது. லிபரல்வாத கொள்கையின் பிரகாரம் தீர்மானங்களை மேற்கொள்ள பஸில் ராஜபக்ஷ முன்வைத்த பிரேரணைகளை நாங்கள் அமைச்சரவையில் தொடர்ந்து நிராகரித்து வந்தோம்.

பின்னர் அமைச்சரவையில் இருந்து பஸில் ராஜபக்ஷவை நீக்குவதற்கு 10 கட்சிகள் இணைந்த கூட்டணி நடவடிக்கை எடுத்தபோதும் மார்ச் 2 ஆம் திகதி பஸில் ராஜபக்ஷ, எங்களை அமைச்சரவையில் இருந்து வெளியில் போக நடவடிக்கை எடுத்தார். என்றாலும் நாங்கள் மக்கள் மத்தியில் மேற்கொண்ட பிரசாரத்தின் பயனாகவும் மக்களுக்கு ஏற்பட்ட பொருளாதாரக் கஷ்டம் காரணமாகவும் மக்கள் போராட்டம் தலைதூக்கியது. இதன் காரணமாக பஸில் ராஜபக்ஷ பதவி விலகினார். அதனைத்தொடர்ந்து பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினார்.

அத்துடன் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண கோட்டாபய ராஜபக்ஷவுடன் நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட சர்வகட்சி அரசாங்கம் என்ற எமது உடன்படிக்கையை மீறி அவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமாக நியமித்தார். என்றாலும் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி, பிரதமர் இரண்டு பேரும் பதவி விலகவேண்டும் என தொடர்ந்து போராட்டம் செய்த காரணமாக ஜனாதிபதி பதவி விலகினார்.

ஆனால் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணைக்கு மாறாக ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றார். அதனால் ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் பலத்துடன் நீக்கவேண்டும் அந்த நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கின்றோம்.

மேலும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சர்வகட்சி அரசாங்கம் அமைத்து, அதற்கு எவ்வாறு தீர்வுகாண்பது தொடர்பில் தேசிய சபை அமைக்கவேண்டும் என்றே நாங்கள் ஆரம்பத்தில் இருந்து தெரிவித்து வருகின்றோம்.

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. யார் தலைமையில் சர்வகட்சி அரசாங்கம் அமைத்தாலும் அந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை புதிய லிபரல்வாத கொள்கையாக இருந்தால் அந்த அரசாங்கத்தில் நாங்கள் இணைந்துகொள்ளப்போவதில்லை. அதனால் சோசலிச பொருளாதார கொள்கைக்கே நாங்கள் ஆதரவளிப்போம்.



அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது நாட்டை கட்டியெழுப்புவதை விட ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தவே செயற்பட்டு வருகின்றார். அதற்காக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை தனது பக்கம் இழுக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தே எம்.பிக்களை எடுத்துக்கொள்ள முயற்சிக்கின்றார். ஏற்கனவே 2 பேர் அவருடன் இணைந்துகொண்டுள்ளனர். – என்றார்.

# நல்லாட்சியில் அமெரிக்காவுடன் செய்துகொள்ள முடியாத ஒப்பந்தங்களை ரணில் முன்னெடுக்கும் அபாயம் உள்ளது!

நல்லாட்சி அரசாங்கத்தில் அமெரிக்காவுடன் செய்து கொள்ள முடியாமல்போன ஒப்பந்தங்களை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருப்பதால் அதனை மேற்கொள்ளும் அபாயம் இருக்கின்றது. நாட்டுக்கு ஆபத்தான ஒப்பந்தங்களைச் செய்ய முற்பட்டால் அதனைத் தடுப்பதற்கு மக்கள் தயாராக இருக்கவேண்டும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

மக்கள் ஆணை இல்லாமலே ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையுடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். ஐக்கிய தேசிய கட்சிக்கு நாடாளுமன்றத்தில் எந்த உறுப்பினரும் இல்லாத நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஊடாக ராஜபக்ஷவினரே அவரை ஜனாதிபதி பதவிக்கு நியமிக்க உதவியாக இருந்தனர்.

பொதுஜன கட்சியின் தவிசாளர் பஸில் ராஜபக்ஷ அமெரிக்க பிரஜா உரிமை உடையவர். ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கத் தனது கட்சியை இணக்கப்பாட்டுக்குக்கொண்டுவர அவரே பின்னால் இருந்து செயற்பட்டுள்ளார். அமெரிக்காவுக்குத் தேவையான முறையில் ஆட்சியைக் கொண்டு செல்லவே ரணில் விக்கிரமசிங்க தற்போது செயற்பட்டு வருகின்றார்.

அத்துடன் நல்லாட்சி அரசாங்கத்தில் அமெரிக்காவுடன் 3 ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருந்தார். அதில் அக்டா ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது, ஏனைய இரண்டு ஒப்பந்தகளான எம்.சி.சி. மற்றும் சோபா ஆகிய இரண்டு ஒப்பந்தங்களும் மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டன.

இந்த இரண்டு ஒப்பந்தங்களும் நாட்டுக்கு பாரிய ஆபத்தாகும். எம்.சி.சி ஒப்பந்தம் மூலம் எமது காணிகள் அமெரிக்காவுக்குப் பரிபோகும் அபாயம் இருக்கின்றது.



எச்சரிக்கின்றார் திஸ்ஸ விதாரண

அதேபோன்று சோபா ஒப்பந்தம் மூலம் அமெரிக்க இராணுவம் எமது நாட்டுக்குள் எந்த தடையும் இல்லாமல் வருவதற்கு இடமளிக்கப்படுகின்றது.

அத்துடன் நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தற்போது நாட்டின் ஜனாதிபதி. அதனால் நாட்டுக்கு ஆபத்தான இந்த ஒப்பந்தங்களை மீண்டும் மேற்கொள்வார் என்ற அச்சம் இருக்கின்றது.

நாட்டுக்கு ஆபத்தான இவ்வாறான ஒப்பந்தங்களை மேற்கொள்ள ரணில் விக்கிரமசிங்க முயற்சித்தால் அதனைத் தடுப்பதற்கு மக்கள் தயாராக வேண்டும்.

மேலும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியான நிலைமையில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும். மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் முன்னெடுக்கும் நல்ல வேலைத் திட்டங்களுக்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

மாறாக, அமெரிக்காவுக்கு நாட்டை விற்பனை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதற்கு எதிராக மக்களுடன் இணைந்து போராடுவோம். – என்றார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் புதிய முதுமாணிக் கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் ஏற்பாட்டில் புதிதாக 'கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணி' என்ற கற்கை நெறி ஆரம்பிக்கப்படுகிறது.

இன்று (புதன்கிழமை), ஆடி மாதம் 2022 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீட மண்டபத்தில் இதன் தொடக்க நிகழ்வு இடம்பெறுகிறது.

இலங்கையில் தமிழ்மொழி மூலமாகக் கிறிஸ்தவக் கற்கைகளில் ஆரம்பிக்கப்படும் முதலாவது பட்டப்பின் முதுமாணிக் கற்கைநெறி இதுவாகும். இதன்மூலம் கிறிஸ்தவம் மற்றும் கிறிஸ்தவ நாகரிகம், இறையியல் ஆகிய துறைகளில் இளமாணிப் பட்டம் பெற்றவர்களும், ஏனைய துறைகளில் இளமாணிப்பட்டம் பெற்ற ஆர்வமுள்ளவர்களும், நீண்டகாலமாகக் கிறிஸ்தவக் கல்வி மற்றும் கிறிஸ்தவத் துறைகளில் பணியாற்றுபவர்களும் தமது கல்வித்தகைமையை உயர்த்திக்கொள்ளவும், அறிவை மேம்படுத்திக் கொள்ளவும் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசன் தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ, திருமலை ஆயர் நோயல் இம்மானுவேல், ஒய்வு பெற்ற தென்னிந்தியத் திருச்சபை ஆயர் ஜெபநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

மேற்படி நிகழ்வு இன்று மாலை உயர் கற்கைகள் பீடத்தில் நடைபெறவுள்ளது.

# சேதமடைந்த பொருள்கள் எவை?

## தரவுகளை பதிவு செய்ய இன்று ஜனாதிபதி மாளிகைக்கு செல்லும் தொல்பொருள் குழு!

கொழும்பு, ஜூலை 27

ஜனாதிபதி மாளிகையில் சம்பூர்ணமாக அழிவடைந்துள்ள, சேதமாக்கப்பட்டுள்ள கலாசார, தொல்பொருள்கள் எவை என தரவுகளை பதிவு செய்துகொள்வதற்காக தொல்பொருள் திணைக்களத்தின் சிறப்புக் கூழு வொன்று இன்று (புதன்கிழமை) ஜனாதிபதி மாளிகைக்குச் செல்லவுள்ளது.

பொலிஸார் முன் வைத்துள்ள கோரிக்கை பிரகாரம், இந்த நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் உதவி தொல்பொருள் பணிப்பாளர் (மேல் மாகாணம்) ஷியமளி ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கடந்த ஜூலை 9 ஆம் திகதி போராட்டக்காரர்கள், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, ஜனாதிபதி செயலகத்தைக் கைப்பற்றிய நிலையில், அவற்றிலிருந்த தொல்பொருள்கள் சேதமாக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி மாளிகையில் இருந்த தொல்பொருள்கள் தொடர்பில், தொல்பொருள் திணைக்களத்திடம் பதிவுகள் இல்லை என அந்த திணைக்களம் கூறுகின்றது.

இந்நிலையிலேயே அதுதொடர்பான பதிவுகளுக்காக இன்று சிறப்புக் குழு அங்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.07.2022இல் வெளியிடப்பெற்றது.